கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர், தேதி:27.11.2025

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்**
**இந்திய அரசியலமைப்பு தின விழாக் கொண்டாட்டம்**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர் நல மையத்தின் சார்பாக இந்திய அரசியமைப்பு தின விழா 26.11.2025, புதன்கிழமையன்று நடைபெற்றது. மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடையே இந்திய அரசியலமைப்பின் மாண்புகளை எடுத்துரைக்கவும், குடிமைப் பொறுப்பு மற்றும் அரசியலமைப்பு பற்றிய ஆழமான புரிதலை ஏற்படுத்தும் விதமாகவும் மாணவர்களுக்கு பல்வேறு போட்டிகள் நடத்தப் பட்டன.

"அடிப்படைக்கடமைகள் மற்றும் தேசக் கட்டமைப்பு அடிப்படைக் கடமைகளை நீதிமுறையாக்க வேண்டிய அவசியம்" என்னும் தலைப்பில், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் கட்டுரைப் போட்டியும், அரசியலமைப்பின் முக்கியக் கொள்கைகளை சித்திரமாக வெளிப்படுத்தும் விதமாக, "அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகள்" எனும் தலைப்பில் சுவரொட்டி தயாரிக்கும் போட்டியும், இந்திய அரசியலமைப்பு சாசனம், கட்டமைப்பு, வரலாறு ஆகியவற்றை உள்ளடக்கிய "இந்திய அரசியலமைப்பு" எனும் தலைப்பிலான வினாடி வினாப் போட்டியும் மாணவர்களுக்கு நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, மாணவர் நல மையத்தின் ஆசிரியர்களும், அலுவலர்களும் அரசியலமைப்பின் கொள்கைகளை நிலை நிறுத்துவதற்கான தங்களின் அர்ப்பணிப்பினை உறுதிப்படுத்தும் வகையில் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். மேலும், தமிழகமெங்கும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு உட்பட்ட பல்வேறு தொகுதி கல்லூரிகளும் தங்களது வளாகங்களில் இந்திய அரசியலமைப்பு தினத்தை பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மூலம் கொண்டாடின.இந்நிகழ்வுகளை மாணவர் நல மைய முதன்மையர் ஜெ. இராமலிங்கம் தலைமையேற்று நடத்தி வைத்தார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மாணவர் நல மையப் பேராசிரியர்களும் நாட்டு நலப் பணித்திட்ட அலுவர்கள் கே. சந்திரகுமார், டி. அமிர்தம், வி. பழனிசெல்வம் ஆகியோரும் இணைந்து நடத்தினர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**